உ
சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
19/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
௨௫-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசுக] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ ஆவணி மீ ௬உ (1947 ஆகஸ்ட் 22 வெள்ளிக்கிழமை) [இல நுசுக

## பிரார்த்தனை

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவ ய்ப் பொலியச் சிவாயநம வென்றுநீ றணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலி யூரனே.

—அப்பர்

# “திருவாளர்”

[திரு. சே, வெ. ஜம்புலிங்கம்பிள்ளை]

திரு + ஆளர் என்னும் பதங்கள் திருவாளரென ஆயின. திரு – செல்வம், ஆளன்–தலைவன். செல்வவான் என்பது திரண்ட பொருள். இச்சொல் இப்போது உலக வழக்கில் எல்லோருக்கும் அடைமொழியாக உபயோகிககப்பட்டு வருகின்றது. தனித் தமிழ்க் கிளர்ச்சி ஏற்பட்ட பிறகே இச் சொல் வழக்கில் வரலாயிற்று. அதற்குமுன் வழங்கப்பட்ட சொல் “ஸ்ரீமான்” என்னும் வடமொழிப் பதமாகும். அதுவும் செல்வவான் என்னும் பொருளையே பயப்பதாகும்.

திருவாளர் என்னும் சொற் பிரயோகம் பெரியபுராணத்தில் இரண்டு பாக்களிற் காணலாம்.

அவையாவன:

“நேச நிறைந்த வுள்ளத்தால்
நீல நிறைந்த மணிகண்டத்து
ஈச னடியார் பெருமையினை
யெல்லா வுயிருந் தொழவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்.
பெருவாய் முதலை கரையின்கட்
கொடுவந் துமிழ்ந்த பிள்ளைதனை
உருகா நின்ற தாயொடி
யெடுத்துக் கொடுவந் துயிரளித்த
திருவா ளன்தன் சேவடிக்கீழ்ச்
சில மறைபோ னெடுநீழ்ந்தாள்
மருவார் தருவின் மலர்மாரி
பொழிந்தார்விசும்பின் வானோர்கள்”

இவ்விரு பாக்களிலும் திருவாளன் என்னுஞ் சொல் சைவசமய குரவராகிய சுந்தரமூர்த்திகளைக் குறிப்பதாகும். சுந்தரர் தாம் தியாகேசர் அருளாற் பாடிய திருத்தொண்டத்தொகை மூலமாகச்சிவனடியார் பெருமையை உலகிற்கு அறிவித்தார். இத்திருத்தொண்டத் தொகையின் வகைவிரி நூல்களே பின்னரெழுந்த திருத்தொண்டர் திருவந்தாதியும் பெரிய புராணமுமாம். ஈசனடியவரெல்லாம் ஞானவரன்கள். அவர்கள் பெருமை இயம்புந்தரத்ததன்று. சேக்கிழாரே வேறொரு திருவிருத்தத்தில் அடியார் பெருமையின் சிறப்பைப் போற்றுவது அவதானிக்கத்தக்கது.

ஞாலமுய்ய நாமுய்ய
நம்பிசைவ நன்னெறியின்
சீலமுய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பாடச்செழுமறை
ஒலதுடவு முணர்வரியா [கள்
ரடியாருடனு முளதென்றால்
ஆலமுது செய்தபிரா

னடியார்பெருமை யறிந்தாரார்.

ஞானிகளின் பெருமையை ஞானிகளேயறிவர். இதனால் சிவஞானச் செல்வராகிய அடியவர்களின் சிறப்பைச் சிவபிரானுருடைய சாஜாமூர்த்தமாகிய சுந்தரர் கூறலாயினர். இத்தகைய பெருமையுடையவரைச் சேக்கிழார் “திருவாளன்”என்று அழைக்கின்றார். திருவாளன் என்பது சிவ ஞானச் செல்வன் என்னும் பொருளில் வந்துளது,

இனி இரண்டாவது பாடலை நோக்குவாம். இப்பாடலில் சுந்தரமூர்த்திகள் அவிநாசியில் முதலையுண்ட பாலனை அழைத்த செயற்கருஞ்செய்கை குறிப்பிக்கப்பட்டுளது. சுந்தரரைப் போன்ற சிவஞானச் செல்வர்களாலன்றி இவ்வற்புதம் பிறரால்நிகழ்த்த முடியாதது.

வறந்திடு பொய்கைமுன்
னிரம்ப மற்றவன்
உறைந்திடு முதலைவந்
துதிப்ப வன்னதால்
இறந்திடு மகன்வளர்ந்
தெய்தப் பாடலொன்று
அறைந்திடு சுந்தர
னடிகள் போற்றுவாம்.
போதமுண்ட பிள்ளையென்பு
பொருகண்மாது செய்ததோ
காதல்கொண்டு சொல்லின்மன்னர்
கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலைகக்க
மகனைநீ யழைத்ததோ
யாதுநம்பி யரிதுநன்
றெனக்கியம்ப வேண்டுமே.

என்னுங் கந்தபுராணச் செய்யுளும் சிவப்பிரகாசர் பாடலும் இவ்வற்புதத்தின் தனிப்பெருமையைக் காட்டும். சிவபெருமானுடைய தோழராகியசுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு ஏற்புடைத்தாகக்கருதப்படுமடைமொழிச் சொல்லை எம்போன்ற சாமானியர்களுக்கு உபயோகிப்பது பொருத்தமாகக் காணப்படவில்லை. இதுபோல “சைவசிகாமணி” என்னுஞ் சொற்றொடர் திருஞானசம்பந்தருக்கு பியாண்டார் நம்பிகளால் அபிதானமாகச் சூட்டப்பட்டுளது. பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஆனல் வழக்காற்றிய அத் தொடர்மொழி சிவநேயர்களுக்கெல்லாம் உபயோகப் படுத்தப்படக் காணலாம்.

# இந்திய சுதந்திரம்

## மிஸ்ரர் சேனநாயக்காவின் செய்தி

இந்திய சுதந்திரதின விழாவை ஒட்டி சென்றவாரம் ஸ்ரீஜுத் கிரி ஓர் விருந்துபசாரம் நிகழ்த்தினர். அதில் தேசாதிபதி உட்படப் பல பிரமுகர்கள் பங்குபற்றினர்.

இலங்கை மக்களின் சார்பாக, சுதந்திர இந்தியாவுக்கு நல்வாழ்த்துக்கூறி விவசாய மந்திரி மிஸ்ரர் டி. எஸ் சேனநாயக்கா முதலிற் பேசினர்.

இந்த நன்னாள் ஆசியாக் கண்டம் முழுவதற்குமே மங்களமான திருநாளென்றும் மற்ற எல்லா நாடுகளையும்விட இலங்கையே அதிகம் மகிழ்ச்சியடைகின்ற தென்றும் கூறிவிட்டு மிஸ்ரர் சேனநாயகா மேலும் பேசியதாவது: “நம்மையும் இந்தியாவையும் ஒரு குறுகிய கடல் பிரிக்கின்றதென்றாலும் தொன்றுதொட்டு இருநாடுகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது. ராமாயணம்போன்ற காவியங்கள் இந்தியாவுக்கு மட்டுமல்ல இலங்கைக்கும் பழம் பெரும் காவியப் பொக்கிஷங்களாகும் 1500 வருடங்களுக்குமுன் சிங்களவர்களாகிய நாம் இந்தியாவிலிருந்தே இங்கு வந்தோம். யாழ்ப்பாணத் தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து சமீபத்தில் வந்தபடியால் அவர்களுக்கு இந்தியாவுடன் இன்னும் அதிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது

இதன்பின் காந்திஜியையும் நேருஜியையும் மிஸ்ரர் சேனநாயக பாராட்டிப்பேசினர். இலங்கைத்தீவுதனது ஊக்கத்துக்கும் உற்சாகத்துக்கும் இந்தியாவையே எதிர்பார்க்குமென்றும் இருநாடுகளும் தங்களுக்கிடையிலுள்ள அற்ப வேற்றுமைகளை நீக்கி சுதந்திரப்பாதையில் சேர்ந்து முன்னேறுமென்றுஎதிர்பார்ப்பதாயு மிஸ்ரர் சேனநாயக கூறினர் அரசியல் விடுதலைக்குப் போராடும் ஆசியா நாடுகளெல்லாம் இந்தியாவின் தலைமையையும் உதவியையும் ஏற்கனவே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனவென்றும் அவர் இறுதியில் சொன்னர்.

இதற்கு ஸ்ரீ வி. வி. கிரி உரிய முறையில் பதிலளித்துப் பேசினர்.

# சித்திரைவரையே!

## மவுன்ற்பேற்றன்தீர்மானம்

வருகிற சித்திரைமாதத்துடன், இப்போது இந்தியாவின் “கவர்னர் ஜெனர”லாகவுள்ள மவுன்ற்பேற்றன் பிரபு தம் பதவியைவிட்டு நீங்கிவிடுவாரென்று தெரிகிறது. சென்ற 15-ம் திகதி இந்திய சுதந்திர அங்குரார்ப்பண விழாவில் இந்த அபிப்பிராயத்தை அவர் வெளியிட்டார், அப்போது அவர் தெரிவித்ததாவது:

“அடுத்த ஏப்ரல்(சித்திரை)மாதம் வரைக்கும்தான் நான் இப்பதவி வகிக்க விரும்புகிறேன். அதன்பின் என்னை இப்பதவியிலிருந்து விடுதலை செய்யும்படி கேட்க உத்தேசித்திருக்கிறேன். இந்தியர்களில் ஒருவர்தான் இப்பதவியில் இருக்கவேண்டுமென்பது எனது விருப்பம்.

“இன்றுமுதல் நான் உங்களின், தொண்டன், சேவகன்; உங்களில் ஒருவன். உங்களது சொந்த அரசியல் திட்டத்தின்படி பதவி ஏற்றுள்ள யான் இந்தியாவின் நலன்களில் கண்ணும் கருத்துமாக விருந்து அதன் முன்னேற்றத்துக்கு உழைப்பதுவே எனது வேலை. அதிகாரமாற்றத்தின் காரணமாக ஏற்படும் பல சிக்கலான பிரச்சினைகளைச் சமாளிப்பதில் உதவி செய்யவே நான் இப்பதவியை ஒப்புக்கொண்டேன்.

“ஹைதராபாத்தை ஒழிந்த எல்லாச் சமஸ்தானங்களும் இந்தியச் சமஷ்டியிற் சேர்ந்துவிட்டன. ஹைதராபாத் மட்டும் இன்னும் சேரவில்லை. ஆனல் வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து, ஆகிய மூன்று விஷயங்களிலும் ஒத்துழைப்பதாகநிஸாம் மன்னர் எனக்கு உறுதி கூறியிருக்கிறார்.”

# எல்லைப்புற எதிர்காலம்

## ஐக்கியதேச ஸ்தாபனத்துக்குச் சமர்ப்பணம்

இந்தியா பிரிக்கப்பட்டு பாகிஸ்தான், இந்தியா எனும இரு சுயராஜ்யநாடுகள் அங்குரார்ப்பணமாய் விட்டபோதிலும், அங்கேயுள்ள அரசியற் பிரச்சினைகள் முற்றாகத் தீர்ந்தபாடில்லை. வடமேற்கெல்லைப்புறம் இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் ஓர் பெரிய நெருக்கடியைக் கொடுக்க ஏதுவாகும் என்று “ஹிந்துஸதான் ரைம்ஸ்” பத்திரிகையின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார்.

எல்லைப்புறம் இதுவரை காங்கிரசுக்குப் பெரும் ஆதரவு அளித்து வந்திருக்கிறது. ஜின்னுவின் பாகிஸ்தான் பல்லவிக்கு எல்லைப்புறமக்கள் தாளம் போடவில்லை. அவர்களுடைய ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் மந்திரசபையே இன்னும அங்கே டர்ர் கான் [illegible] தலைமையில் அதிகாரத்தில் இருக்கிறது. இந்த மந்திரசபையைக் கவிழ்க்க மிஸ்ரர் ஜின்னுவும் அவருடைய சகாக்களும் செய்த முயற்சிகள்யாவும் பிரதிகூலமடைந்துவிட்டன.

இந்தியா இப்போது பிரிக்கப்பட்டுவிட்டபடியால், எல்லைப்புறமக்கள் தமக்குப் பாகிஸ்தானும் வேண்டாம் இந்தியாவும் வேண்டாம் சுயராஜ்யமே வேண்டும் என்று நிற்கிறார்கள். ஆனல் அதிகாரவர்க்கம் ஓர் போலி வாக்கெடுப்பை நிகழ்த்தி எல்லைப்புறம் பாகிஸ்தானுடனேயே சேரவேண்டுமென்று நிர்ணயித்துவிட்டது. இந்த நிர்ணயத்துக்கு டக்ரர் கான்சாகிப்பும் அவரது பட்டாணியரும் இணங்கப்போவதில்லை என்பது நிச்சயம்,

தொடர்ச்சி 6 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸூ
ஆவணிமீ ௬உ வெள்ளிக்கிழமை


## இந்திய சுதந்திர வரலாறு
## II

இந்திய தேசிய காங்கிரஸ் மதபேதம் சாதிபேதம் கட்சிபேத மென்பன வின்றி இந்தியநாட்டு மக்களின் விடுதலையையும் ஈடேற்றத்தையும் உத்தேசித்தே உழைத்து வந்தது; இந்திய காங்கிரஸ் ஆரம்பித்து நடைபெற்ற முதலிருபது வருடமும் இந்திய சுயாச்சிய மெனப்படும் பெரிய தாபனத்திற்கு அஸ்திபார மிட்டகால மெனலாம். சென்ற 1905-ம் ஆண்டு தொடக்கமாக விப்பின் சந்திரபாலர், அரவிந்தகோஷ், லாலா லஜபதிராய், பாலகங்காதர திலகர், டக்ரர் மூன்ஜி முதலாம் இந்தியத் தலைவர்கள சுயராச்சியத்தின் பொருட்டு மிக ஊக்கத்தோடும் வேகத்தோடுங் கருமமாற்றத் தொடங்கினர்; இத்தலைவர்கள் காலத்திலே அந்நிய நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரித்தலும், சுதேசப் பொருள்களை விருத்தி செய்தலுமாகிய அரும்பெருஞ் செயலைப் பாரத மக்கள் கைக்கொள்ளலாயினா; இதனல் அக்காலத்திலே பிருத்தானிய அதிகாரிகள் கொண்ட ஆத்திரமும் வெறுப்புங் கொஞ்சமல்ல; மேலே சொல்லப்பட்ட இந்தியத் தலைவர்களில் தம்நாட்டின் விடுதலைப் பொருட்டுச் சிறைவாசஞ் செய்யப் பின்னின்றவர் எவருமில ரெனலாம்; இத்தலைவர்கள் தாங்கள் அதிக கஷ்டங்களைப் பட்டவிடத்தும், அவற்றைப் பொருட்படுத்தாது பாரதநாட்டி லுள்ள மக்களுக்கு அடிமைத் தனத்தில் வெறுப்பையும் சுவாதீனத்தில் ஆசையையும் மூட்டிவிட்டார்கள்; அந்தச் சமயத்திலேயே டக்ரர் அன்னிபெஸன்ற் அம்மையும் பாரத மக்களுடன் கலந்து சுயராச்சியத்தின் பொருட்டும் இந்திய மக்களின் கல்வி விருத்தியின் பொருட்டும் உழைத்து வந்தார்.

இங்ஙனமாக, 1908-ம் ஆண்டு ஏப்பிரல் மாசம் 30-ந் தேதியன்று முஸபர்பூரிலே, டிஸ்திறிக் நீதிபதியாகக் கடமை பார்த்த, ஹிப்ல்வோர்ட் என்பவருக்கு இலக்காக எறியப்பட்ட வெடிகுண்டு தவறி, கெனடி யென்பவரின் மனைவியையும் மகளையுங் கொன்றுவிட, அதிலிருந்தே பெருங்கலகமும் அதிகாரிகளின் அடக்கு முறையும் இந்தியாநாடு எங்கணும் ஏற்படலாயின.

சென்ற 1915-ம் ஆண்டிலேயே மகாத்மா காந்தியவர்கள் முதன்முதல் இந்திய சுயராச்சியம் பெறும் முயற்சியில் ஈடுபட்டா ரெனச் சொல்லலாகும்; மகாத்மா அக்காலந்தொட்டுப் பாரத மக்களைக் கலகஞ் செய்ய வேண்டா மென்றும் அக்கிரமங்கள் செய்ய வேண்டா மென்றும் பலவாறு போதிக்கத் தொடங்கினர்; அதன்பயனாக இந்தியாவிலுள்ள கலகங்கள் 1920 ஆண்டு வரையில் ஒரு அளவிற்குக் குறைந்தன வென்று சொல்லலாம்; மகாத்மா காந்தி தமது சத்தியாக்கிரகமென்ற முறைக்கு அக்காலத்திலேயே இந்தியாவில் விதையிட்டார்; ஆனாலும் சத்தியாக்கிரக முறையிலே ஆரம்பத்தில் இந்திய மக்களிடம் நம்பிக்கை ஏற்படவில்லை; சிலர் அந்த முறையை வெறுத்தனர்; இன்னுஞ் சிலர் அம்முறையினால் ஒருபோதுஞ் சுயராச்சியங் கிட்டாதெனக் கண்டித்தனர்; சிலர் அலட்சியமாகவிருந்தனர்; மகாத்மாகாந்தி இந்தியகாங்கிரஸ் தலைவராக வந்தபோது, தாம் முந்தித் திரான்ஸவால் நாட்டிற் கைக்கொண்ட சாத்வீக எதிர்ப்புச் சத்தியாக்கிரக மென்னுமிவைகளைக் கையாளத் தொடங்கினர்; 1930-ம் ஆண்டில் மகாத்மாகாந்தி தாண்டியென்னுமிடத்தில் உப்பள்ளுதலாகிய செயலைச் செய்து சிறைவாசம் புக்கார்; இதன் பயனாக 1931-ம் ஆண்டில் லண்டன்நகரில் வட்டமேசை மகாநாடு கூட்டப்பட்டது; அம் மகாநாட்டின்போது மகாத்மா சிறையி லிருந்து விடுதலை செய்யப்பட்டு "காங்கிரஸ்" பிரதிநிதியாக லண்டன் நகருக்குச் சென்றிருந்தார்.

1937-ம் ஆண்டில் இந்திய பிரதிகாவலரின் விசேஷ அதிகார விஷயமாகப் பல வாதங்கள் நிகழ்ந்தன வெனினும், ஈற்றில் ஒருவாறு சமாதானம் ஏற்பட்டுவிட, ஆறு மாகாணங்களில் காங்கிரஸினர் உத்தியோகம் வகிக்க உடன்பட்டனர். 1938-ம் ஆண்டில் ஹிந்து — முஸ்லீம் ஒற்றுமையை ஆக்கிவிடலாமென்றெண்ணி மகாத்மா பலமுறை ஜின்னாவுடன் பேசியபோதும் கருமம் பிரதிகூலமாகவே முடிந்தது 1939-ம் ஆண்டில் உலகஇரண்டாம் மகாயுத்தம் தொடங்கியபோது காங்கிரஸ் கட்சியார் யுத்த விஷயத்தில் பிருத்தானியருக்குத் துணைபுரிய மறுத்துவிட்டனர்; மேலும் அந்த ஆண்டிற்றானே காங்கிரஸ் மந்திர சபையாரின் தீர்மானப்படி மாகாணங்களிற் கடமை பார்த்த மந்திரி யுத்தியோகத்தர்கள் தத்தம் பதவிகளி லிருந்து தாமாக விலகிக் கொண்டனர். 1940-ம் ஆண்டில் இந்திய பிரதிகாவலர் உவெள்மினிஸ்ரர் முறையிலுள்ள டொமினியன் 'ஸ்ரேற்றஸ்' என்னும் பரிபாலன முறையை இந்திய மக்களுக்கு உதவுவதாக வாக்களித்தார்; அதே ஆண்டிலேதான் ஜின்னா இஸ்லாமியருக்கு வேறான சுயராச்சியம் தரவேண்டு மென்ற வாதாட்டத்தை ஆரம்பித்தார். 1945-ம் ஆண்டிலே சிறைவாசஞ் செய்த இந்தியத் தலைவர்கள் விடுதலை பெற்று அக் காலத்தில் இந்திய பிரதிகாவலராகிய லார்ட் வேவலுடன் ஆலோசனை செய்யுமாறு ஸிம்லாவிற்குக் கூட்டிடப்பட்டனர்; இரண்டுவாரகாலமாக அந்த யோசனைக்கூட்டம் நடந்தபின் கருமம் பிரதிகூலமாக முடிந்தது

அதன்பின்னர் [illegible]

தேர்தலில் காங்கிரஸ் கட்சியார் அநுகூலமடைந்ததும், சுபாஷ் சந்திர போஸைத் தலைவராகக் கொண்ட இந்திய தேசிய சைநியத்தினரை இராசத் துரோகிகளென பிருத்தானிய அதிகாரிகள் விசாரணை செய்யவும். தண்டனை விதிக்கவும் நிச்சயித்ததும், பின்னர் இந்தியத் தலைவர்கள் செய்த தடையான கிளர்ச்சி காரணமாக அந்த விசாரணையை அதிகாரிகள் அடியோடு கைவிட்டதும், இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சிலர் இந்தியாவிற்கு வந்து இந்தியத் தலைவர்களோடு கலந்து விசாரணை செய்ததும், 1946-ம் ஆண்டிலே இந்திய அரசாங்கத்தில் மந்திரிகளாகவிருந்த பழைய அங்கத்தவர்கள் புதிய முறைப் பரிபாலனத் திட்டத்திற்கு இடங் கொடுக்கவேண்டித் தத்தம் பதவியிலிருந்து விலகியதும், லார்ட் வேவல் போக, லார்ட் மவுன்பேற்றன் நிகழும் ஆண்டில் இந்திய பிரதிகாவலராக வந்ததும், அவர் பதவியேற்றவுடனே இந்தியா இரண்டாகப் பிரிந்து இப்பொழுது பூரண சுயராச்சியத்தைப் பெற்றதும் பலர் ஞாபகத்திலுள்ளன; இப்பொழுது பாக்கிஸ்தானெனவும், இந்திய ராச்சியமெனவும் இரண்டு பிரிவாகச் சுயராஜ்யம் ஏற்பட்டிருப்பினும் மிகவும் விரைவில் இந்தியா முழுவதும் பிரிவின்றி ஒற்றுமைப்பட்டு ஒரேசுயராஜ்ய நாடாகுமென்பதே பல அறிஞருடைய அபிப்பிராயமாகும்; இது இன்னுஞ் சிலகாலம் இருந்தறிய [illegible]

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—27).

### என்பிறகே வாரும்

"அம்மா, இன்று அந்திப்போதில் நானுந் தங்கைச்சியும் கப்பலின் மேற்றட்டிலே போய்ச் சற்றுநேரம் இருக்கவிரும்புகிறேம்: உங்களுக்கு அப்படிச்செய்வது சம்மதமா" என்று சிவபாக்கியந் தாயைக் கேட்க, "உங்கள் விருப்பப்படி செய்யுங்கள், மக்காள்" என்றாள் கண்ணகியம்மை: பிற்பகல் ஐந்துமணியாதலும் சிவபாக்கியந் தானகவே பாக்கியலட்சுமியின் சிகையைச் சீப்பிட்டு வாரிப் பின்னித் தொங்கவிட்டு, தன் பயணப்பெட்டியைத் திறந்து, தனக்குரிய சிறந்த ஆபரணங்களை யெல்லாம் எடுத்துக் கட்டவேண்டியவைகளைக் கட்டி, பூட்டவேண்டியவைகளைப் பூட்டி, இடவேண்டியவைகளையிட்டு, முகத்திற்குப் "புசர்"மாதடவி நெற்றிக்குப் பொட்டிட்டு, பின்னிய சடையிற் செயற்கைப்பூச் சொருகி, காலுக்குச் சரிகையிழைத்த வெல்வெற்பாதரட்சை மாட்டச்செய்தாள்; சிறந்த சரிகைசெறிந்த "இரவிக்கை" ஒன்றை அணியச்செய்து, அதற்கேற்ற 'பனாரிஸ்" பட்டாடையொன்றையெடுத்துக் கொடுத்து உடுக்கச் செய்தாள்; இங்ஙனமெல்லாஞ் செய்துவிட்டுச் சிவபாக்கியம் தன் அபிமானத் தங்கையைக் கண்குளிர பாதாதிகேசம்வரையிற் பார்த்தாள்? தனக்கு அலங்காரஞ் செய்வதைக்கண்டு உள்ளமுருக நின்ற பாக்கிய இலட்சுமி "அக்கா, என் இப்படியெல்லாம் எனக்குச் செய்கிறீர்கள்" என்று இதமுற வினவ, "வேறொன்றுக்குமல்ல, தங்காய், ஒருகால், கப்பலின் மேல் தட்டிற்குப் போவோம்" என்று தமக்கை அன்புடன் சொல்ல, 'அப்படியானால், நீங்கள் உங்களை அலங்காரம்பண்ணிக் கொள்ளவில்லையே" என்று தங்கை கேட்க "எனக்கு உள்ள அலங்காரம் போதுந் தங்காய், என் சொல்லைத் தட்டாமல் என்னுடன் வாரும் போவோம்" என்றாள்; அப்போது அந்திப்பொழுது கழிந்து இராவுண்டாயிற்று; சிவபாக்கியம் தான் தரித்திருந்த சேலையோடு முட்டாக்கிட்டுக் கொண்டு "தங்காய், ஏனென்று கேளாதீர், என்பிறகே வாரும்' என்று சொல்லிவிட்டு ஏணிப்படிவழியே ஏறி மேலே போக, அவளைத் தொடர்ந்து சென்றாள் பாக்கியலட்சுமி. மேலேயுள்ள தட்டில் ஏறியமாத்திரத்தே அங்கே வெளிச்சம் பட்டப்பகல்போற் காணப்பட்டது; கண்டமாத்திரத்தே சிவபாக்கியம் சிறிது கூசினளெனினும், அதனைப் புறத்தே காட்டாது சென்று ஆட்கள் எவருமில்லாத ஒருபக்கலில் பாக்கியலட்சுமியோடு நின்று சந்திரன் உமிழும் நிலவிலே கடற்றிரைகள்மறிகிறதைப் பார்த்தாள்: பார்த்துவிட்டுக் கப்பலின் மேல்தட்டிலே யிருப்பவர்களை அங்கேதானே நின்று பார்க்கும்போது ஒருவர் ஒரு நாற்காலியில் இருப்ப, அவர் பக்கத்திலே இராமன் அவரோடு வார்த்தையாடிக்கொண்டு நிற்பதைச் சிவபாக்கியம் அவதானித்துத் தங்கையை நோக்கி, "தங்காய், அந்த ஆள்தானே? அம்மா சொன்ன ஆள்" என்று பாக்கியலட்சுமிக்குச் சுட்டிக்காட்டி மெல்லக்கேட்க, "ஓம் அக்கா, உவராகத்தான் இருக்கவேணும்; அன்றும் உவர் உந்த இடத்திலேயே இருக்கக் கண்டேன்" என்று தானும் அவதானித்துக் கொண்டு பதில் கூறினாள் பாக்கியலட்சுமி; "தங்காய், இவர்களிருவரும் எங்களை அவதானிக்கவியலாத விதமாக நாங்கள் சற்றுச் சமீபத்திற் போய் அந்த ஆளை அவதானித்துக்கொண்டு வந்துவிடவேணும்; நீர் பயப்படவேண்டாம், கூசவேண்டாம்; அப்படியே நீர் செய்தால் அவர்கள் கண்ணிற் புலப்படவேண்டி நேரும்" என்றுசிவபாக்கியஞ் சொல்ல, "அதுசரி அக்கா மற்றவர்கள் எங்களை யறியாவிட்டாலும் இராமன் எங்களை அவதானித்தல் முடியுந்தானே; எப்படித் துணிந்து சமீபத்திற் போவது?" என்று பாக்கியலட்சுமி கேட்க, 'இல்லை, தங்காய், நீர் உப்படி ஆடையாபரணங்களால் நன்கு அலங்காரஞ் செய்ததையும், நான் இப்படி முட்டாக்கிட்டதையும் இராமன் முந்தியொருபோதுங் கண்டிலன்; ஆனதினால் அவனும் எங்களை இந்த நேரத்தில் இனியொன்று அயிர்த்தல் முடியாது; அன்றியும் நாங்கள் அவர்களுக்குச் சமீபமாகச் சென்று சிலநிமிஷமேனும் நிற்கப்போவதில்லை' ஒருவரை அவதானிக்க ஒரு நிமிஷம் போதும்; ஆனதாற் கூசாமல் என் பின்னே வாரும்" என்று சிவபாக்கியம் மெல்லமெல்ல ஒருபுறமாக ஒதுங்கிச்செல்ல, பாக்கியலட்சுமியும் அவள் பிறகே கூசிக்கூசி மெல்லச்சென்றாள்,

### 'பயனுண்டோ? இல்லையே'

கன்னியரிருவரும் பிற் பக்கமாக மெல்லவந்து அந்த ஆளை அவதானித்துக்கொண்டு முகத்தையும் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தினால்வலப்புறமாக முற்பட்டு வந்து ஒருநிமிஷ நேரத்தில் ஆளை அவதானித்தபடியே நடந்து அப்பாற் செல்லும்போதே, சிந்தனையோடிருந்த அந்த மனுஷன் அவர்களைக் கண்டான்: உற்றுநோக்கினான்; ஆனால் அவர்கள் அதற்கிடையிற் சென்று கப்பலின் உட்பக்கஞ் செல்லும் படிவழியே இறங்கினர்; அவர்கள் மறைய, அந்த மனுஷன் இராமனைப் பார்த்து, "இராமன் இப்போது இந்த மார்க்கமாக வந்துவிட்டுப் போகிறார்களே இரு பெண்கள்; அவர்கள் யாரென்பது உனக்குத் தெரியுமா?" என்று வினவ, "நானும் அதையிட்டுத்தான் ஐயா யோசிக்கிறேன்; இன்னாரென்று அவதானிக்க இயலவில்லை" என்று சிந்தனையுடன் சொன்னான் இராமன; "அவர்கள் எங்களுக்கு முற்புறமாகத்தான் போனவர்கள்; நான் அப்பொழுது, பெண்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொல்லாத வெள்ளச்சேதம்

## 1500 பேர் இறந்தனராம்

## 15000 பேர் வீடுவாசல்கள் இழந்தனர்

சென்றவாரத் திறுதிப் பகுதியில் இலங்கையின் பல பாகங்களிலும் நிகழ்ந்த வெள்ளப் பெருக்குச் சம்பந்தமான புதினங்கள் இப்போது வெளிவரலாயின.

ஹற்றன் பகுதியில் ஓர் மண்சரிவு ஏற்பட்டு ஓர் மோட்டார்கார் நிலையத்தைத் தாக்கி அழித்துவிட்டது. அதன்பயனாகப் பல லொறிகளும் கார்களும் உடைந்து மூடப்பட்டன. சிலர்களிதரும் இறந்துவிட்டனர் என்று தெரிகிறது.

வெள்ளப் பெருக்கால் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்கள் நோர்ட்டன் பாலம கொத்மலே என்னும இடங்களும், கண்டியில் கெதம்பெ என்னும கிராமமும், நுவரெலியா, சழுனிப் பள்ளத்தர்க்குப் பகுதியும், கொழும்புமாம்.

கொத்மலே என்னும் இடத்தில் மண்சரிவு ஏற்பட்டதில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள். நுவரெலியாவில் ஓர் தோட்டத் தொழிற்சாலை வெள்ளத்தால் அள்ளுண்டுவிட்டது. தொழிலாளர் வசிக்கும் வீடுகள் மண் சரிவால் புதைக்கப்பட்டன. பலர் இறந்துவிட்டனர்.

கெதம்பை என்னும் கிராமத்தில் 300 குடும்பங்கள் வீடுவாசலின்றித் தவிக்கின்றன. பலர் உயிர்துறந்தனர் என்று சொல்லப்படுகிறது. கடுகன்னாவைப் பாதையைத் திருத்திச் செப்பனிட இன்னும் குறைந்தபட்சம் ஓர் மாதமாவது பிடிக்கும் என்று தெரிகிறது.

வெள்ளப் பெருக்காலும் மண்சரிவாலும் ஏற்பட்டுள்ள நிலைமை பரிதாபகரமானதாயிருந்த போதிலும், பீதிக்கு ஏதுவானதல்ல என்று போக்குவரத்துப்பகுதி மந்திரி மிஸ்டர் கொத்தலாவல தெரிவிக்கிறார்.

வெள்ளப் பெருக்கினல் அவதியுறுவோர்க்கு உதவிசெய்யத் தேசாதிபதியின் வெள்ள விபத்து நிவாரண நிதி என்று ஓர் நிதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதிக்குத் தேசாதிபதியே 1000 ரூபா உதவி, இலங்கை மக்கள் அனைவரையும் உதவிசெய்யும்படி கேட்டிருக்கிறார்.

தென் இலங்கையில் காலித்தினம் நடக்கவிருக்கும்பாராளுமன்றத்தேர்தல்கள் நடக்குமோ என்பது சந்தேகம். பல இடங்களிலே வீடுவாசல்கள் வெள்ளத்தினல் அள்ளுப்பட்டுவிட்டன. போக்குவரத்துப் பாதைகள் சிதைவுற்றன. இதன பயனாக நாளை நடக்கவிருக்கும் தேர்தல்களைத் தவணையிடவேண்டுமென ஓர் ஆலோசனை இருந்துவருகிறது. ஆனல் இது பற்றிய முடிவு இதுவரை இங்கே கிடைக்கவில்லை.

வெள்ளத்தினுற்பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு விநியோகிக்கும் விஷயத்தில் அரசாங்கம் மிகவும் கஷ்டப்படுகிறது. தெருக்களும் புகையிரதப் பாதைகளும் பழுதுபட்டபடியினல் மோட்டார் மார்க்கமாகவோ, புகைரத மார்க்கமாகவோ அந்த இடங்களுக்கு உணவுப்பொருள்களை அனுப்பமுடியவில்லை. சென்ற ஞாயிற்றுக்கிழமையும் அதற்குப் பின்னும் சீர்கொழும்பில் உள்ள சில இடங்களுக்கு ஆகாய விமானத்தில் உணவுப் பொருள்கள் கொண்டுபோய் அவற்றைக் கீழே போட்டார்கள்.

நமது நிருபர் பின் வருமாறு எழுதுகிறார்:

இந்த நாட்டில் இதுவரையில் இலங்கைச் சரித்திரத்தில் அறியாத மகா பெரும்" சேதம் மலைநாட்டில் மழை வெள்ளத்தினல் ஏற்பட்டு விட்டது. எண்ண இருதயம் பதறுகிறது. எடுத்துச்சொல்ல வாய்தடுமாறுகிறது. எழுதக் கை நடுங்குகிறது நாவலப்பிட்டிப் பக்கத்தில் உள்ள பலகாமத்தில் ½ மைல் நீளமும், கம்பளையில் 3 மைல் நீளமும், கலிஓயாவில் ½ மைல் நீளமும், போதனை — கெத்தம்பையில் 1½ மைல் நீளமும், கடுகாஸ்தோட்டையில் 2½ மைல் நீளமும், மாத்தளையில் 1 மைல் நீளமும் உள்ள இடங்களில் குடிசன நெருக்கமுள்ள சகல கட்டிடங்களும் அழிந்து தரைமட்டமாகிவிட்டன. குறைந்தது 1500 மக்கள்வரையில் உயிர் இழந்திருப்பர். 15000 மக்களுக்குமேல் ஆண்கள், பெண்கள், சிறுவர், வயோதிபர்கள் வீடிழந்து உண்ண உணவின்றித் தவிக்கின்றனர். பலகோடி ரூபா பெறுமதியான பொருள்களை வெள்ளம் கொண்டுபோய்விட்டது சகல விதமான போக்கு வரவுகளும் சீர்குலைந்துவிட்டன. பாதைகள் அழிந்துவிட்டன. தபால் தந்திப் போக்குவரவுகள் நின்றுவிட்டன. உணவுக் கஷ்டம் ஏற்படுகிறது. பழையபடி மலைநாட்டுப் புகையிரதப் பிரயாணம் சீர்பட குறைந்தது 3 மாதங்களுக்குமேல் செல்லும்.

நாம் நாவலப்பிட்டியில் இருந்து 17-ம் திகதி கால்நடையாகப் புறப்பட்டு கண்டிக்கு வந்து அங்கிருந்து குருநாகலுக்கு பஸ்ஸில் போய் பின் புகைவண்டியில் இங்கு வந்து சேர்ந்தோம். கண்ட விபரங்களை எல்லோரும் அறிய விரும்புவது இயற்கை. ஆகையால் சுருக்கமாகத் தெரிவிக்கின்றோம்.

நாவலப்பிட்டி ஏனைய இடங்களில் 14-8-47 காலையிலிருந்து செய்திப் போக்கு வரத்துக்கூட இல்லாமல் துண்டிக்கப்பட்டுவிட்டது. அன்று மாலைவரையும் வழமைப் பாதையால் 3வண்டிகள் வந்துசேர்ந்தன. கம்பளையில் வெள்ளம் அதிகமாகையால் வண்டிகள் புறப்படவில்லை. வெள்ளத்தின் நிலைமையைப் பார்ப்பதற்காக மாலை 5 மணிக்கு ஓர் வண்டி அனுப்பப்பட்டது. வண்டியில் நாமும் இருந்தோம். உழப்பனைக்குச் சமீபத்தில் பாதையில் அபாயமிருந்ததினல் வண்டி உடன் பின்பக்கமாகத் திரும்பிவிட்டது. வண்டி திரும்பிச் சிறிது தூரம் சென்றபின் வண்டி நின்ற இடத்திலுள்ள கிணறு உதிர்ந்து கீழ்ப் பக்கமாகப் போவதைக் கண்டோம். வண்டிகள் வந்த வழிப் பாதைக்கும் திரும்பமுடியாமல் இருந்தன. இந்தியப் பிரயாணிகள் உட்பட 500 பேர்வரையில் நாவலப்பிட்டியில் தங்கவேண்டி ஏற்பட்டது. கடும் மழை பெய்துகொண்டிருந்தது. இரவு 11 மணி வரையில்தான் வெள்ளம் பெருக ஆரம்பித்தது. 15-8-47 காலையில் 'பலகாமம்' அழிந்ததைப் பார்க்கப் புறப்பட்டோம் அங்குள்ள சகல கடைகளையும் வீடுகளையும் வெள்ளம் அள்ளிவிட்டது. பாலத்துக்கு மேலால் வெள்ளம் பாய்ந்துள்ளது. வெள்ளத்தில் பெட்டிகளும் வர்ணப் புடவைகளும் போய்க்கொண்டிருந்தன. தொண்டர்கள், சேர்த்துக் கட்டப்பட்ட மரங்கள்மூலம் மக்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தனர். மக்களை வெள்ளம் கொண்டு போய்விட்டதாம், வெள்ளத்தால் சுற்றி நிலையைப்பட்ட 10 குடிசையில் உள்ள 50 பேர் [illegible]

தீய சுதந்திரதினமாகையால் நாவலப்பிட்டிக் கடைகளெல்லாம பூட்டப்பட்டிருந்தன ஆகையால் உணவுக் கஷ்டம் அதிகரித்துவிட்டது பெரிய தண்ணீர்க் குழாய் உடைந்தபடியால் குடி தண்ணீர்க்கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. கதிரேசன் கோவில் கிணறுதான் உதவியது 16-8-47ல் நனுஓயாப்பாலம் உடைந்ததாக செய்தி பரவியது. தலவாக்கொல்லையிலும் — ஹற்றனிலும் அழிவென்றும் தெரியவந்தது. அன்று மழை கொஞ்சம் குறைந்திருந்தது. 17-8-47 காலை பத்து மணிவரையில் நடந்து கண்டிக்குப் போகத் தீர்மானித்தோம். வண்டிப்பாதை மிகமோசமாகச் சீர்குலைந்துவிட்டது. இரும்புப் பாதைவழியாகவே புறப்பட்டோம். உழப்பனைக்கும் நாவலப்பிட்டிக்கும் இடையில் உள்ள ரயில் பாதை மிகக் கேவலமாகச் சீரழிந்துவிட்டது. உழப்பனைக்கு நாவலப்பிட்டிக்கும் இடையில் உள்ள 5 மைல் தூரத்தையும் கடக்க செல்ல 3 மணித்தியாலம் வரையில் பிடித்துவிட்டது. பாதையில் இருந்த பல வீடுகளைக் காணவில்லை தந்திக்கம்பிகள் அறுந்துள்ளன. பல இடங்களில் தண்டவாளங்கள் 100 300 யார் நீளம் வரையில் அந்தரத்தில் இருக்கின்றன. 80—40 அடிக்குமேல் ஆழமுள்ள பள்ளத்தாக்குகள் ஏற்பட்டுவிட்டன. 2 மலைக்கிடையில் உள்ள புகைரதப்பாதையில் 2 அடுத்திலும் மண்சரிவு ஏற்பட்டதினல் பாதை குனமாக இருக்கிறது ஆகையால் அந்த இடத்தை மலையால் ஏறிக்கடக்கவேண்டி இருந்தது. ஏறிஞம் போது வெடிப்பு இருந்ததைக் கண்டு மிக விரைவாகச் சடந்து அப்பாலுள்ள பாதைக்கு வந்துவிட்டோம். நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. சிறிது தூரம் பாதையில் சென்றபின் திரும்பிப் பார்த்த போது நாம் மலையில் கடந்துவந்த பகுதி இடிந்து விழுந்துவிட்டது. உழப்பனைக்கும் கம்பளைக்கும் இடையில் பாதையில் சேதம் குறைவு. 3 இடத்தில் தண்டவாளங்கள் அந்தரத்தில் நிற்கின்றன. இக்கும் தந்திக்கம்பிகள் அறுந்துள்ளன. இங்கு வெள்ளச்சேதம் மிக அதிகம் பிற்பகல் 2 மணிக்கு கம்பளைக்கு வந்துவிட்டோம். இங்கு ஒரு வீட்டில் 23 பேர் தங்கள் இருந்தனவாம், கம்பளையிலிருந்து நவலெலியாவுக்குப் போகும் பாதையில் உள்ள பாலம்வெடித்து சேதம் அடைந்துவிட்டது. முழங்கால் மூடக்கூடிய சேறு உண்டு ஸ்ரேஷனுக்கு மேலால் வெள்ளம் பாய்ந்துள்ளது. தபாலாபீசில் படுத்திருந்த "போஸ்ற் மாஸ்ரர்" கடைசி நேரத்தில் முகட்டை உடைத்து அதன் மூலமாக வெளியேறித் தப்பினர். இங்கு 40 அடி வெள்ளம்; நடு இரவில் மக்கள் நல்ல நித்திரையில் இருக்கும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது. 1½ மணிநேரம் சுற்றிப் பார்த்தோம். 500 பெருக்குமேல் இறந்துவிட்டார்களாம். பல கடைகள் வீடுகள் உட் பூட்டுப் பூட்டியபடி இன்னும் திறக்கப்படவில்லை. இவ்விடங்களை வெள்ளம் மூடியுள்ளது, கடைத்தெருவில் மேடாக உள்ள இடத்துக்கு வெள்ளம் வரவில்லை. இங்கிருந்து பஸ் கடுகண்ணாவைக்குப் போகிறது மக்களை மீட்பதில் யாழ்ப்பாண மக்கள் நல்ல உதவி செய்திருந்தார்கள். பிற்பகல் மூன்றரை மணிக்கு அங்கிருந்து புறப்பட்டோம், பல வீடுகள் கட்டிடங்கள் தரைமட்டம். தாங்க முடியாத சேதம் அடைந்தவீடுகள் அதிகம். கடைகளிலுள்ள சாமான்களும்வீட்டுச்சாமான்களும் எங்கும் சிதறப்பட்டு இருக்கின்றன. கெலிஓயாவுக்கும் கம்பளைக்கும் இடையில் கிணறு இடிந்து பாதாளம் போய்விட்டது. தண்டவாளம் அந்தரத்தில் உள்ளது. தந்தி நிலையம் தூறு யாருக்கு அப்பால் ஆற்றில் வீசப்பட்டுள்ளது. 4-50 க்கு கெலிஓயாவுக்கு வந்து சேர்ந்தோம். கெலி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## சங்கொலி

(தமிழ்மணி)

மங்குகின்ற துன்பவாழ்வை அழித்திடவே எங்குமே
பொங்குகின்ற புதுயுகத்தின் சங்கொலியைக் கேளடா!
கங்குலினை ஒலித்திடவே வானிலத்தே சூரியன்
வெங்கதிரின் ஒளியைவீசிப் போங்குவதைப் பாரடா!

எத்திசையும் எதிரொலிக்க இன்பநாதம் பேசுது
முத்தமிழின் இனிமையுடன் சங்கநாதம் முழங்குது
சத்தியத்தின் பாதைவழி நித்தமும் சென்றிட
கத்துகின்ற குயில் நிகர்த்த சங்கநாதம் கேளடா!

கொடுமைமிக்க அடிமையாட்சி ஒழிந்துவிட்ட போதிலும்
துடிதுடிக்கும் நெஞ்சுகொண்ட தூயதமிழ் மக்களே!
உடலினை உறைத்துழைத்தும் உண்டிஏது மில்லாமல்
கொடுமைதரும் வறுமையிலே வாடுகின்றார் ஏழைகள்!

சிறுமைதரும் அடிமைதனை அகற்றியோட்டிய நாவிலே
சிறுமைதரும் அரசான முறைமையுமெல்லா நாட்டிலும்!
சுரண்டிவாழும் சாதியினை அழித்துவிட்ட போர்தனிலே
பெருமைமிக்க வலிமைமிக்க அரசையும் கூடுவீர்!

## பாஞ்சாலத்திற் கலகம்

### ஆனால் வங்காளத்தில் அமைதி

பாஞ்சாலப் பிரிவினை சம்பந்தமாக எல்லை நிர்ணயசபை தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது. இந்த அறிக்கை சீக்கியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் திருப்தியைக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. பஞ்சாபுக்குள் சில சீக்கியரின் புனித ஸ்தலங்களைக் கிழக்குப் பாஞ்சால மாகாணத்திற் கொண்டுவரப் பாஞ்சாலம் பிரிக்கப்படவேண்டுமென்று சீக்கியர் கோரி வந்தனர் ஆனல் எல்லை நிர்ணய சபையின் அறிக்கையில் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அதன் பயனாகவே வகுப்புக் கலகம் அங்கே ஆரம்பமாகியிருக்கிறது. இந்தக் கலகத்தை அடக்க இந்தியப் பிரதமர் பண்டித ஜவ[illegible] பாகிஸ்தான் பிரத[illegible] கிழக்குப் பாஞ்சாலம் மேற்கு வங்காளம் ஆகியவற்றின் தேசாதிபதிகளும் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

### கல்கத்தாவில் அமைதி

மகாத்மாகாந்தியின் 24 மணி நேர உபவாசத்தின் பின்னர் கல்கத்தாவில் முன்னெருபோதுமில்லாதவாறு பூரண அமைதி நிலவுகிறது. அங்கே இப்போது சில நாட்களாக எவ்விதமான வகுப்புக் கலவரங்களும் இல்லை என்று ஓர் செய்தி கூறுகிறது.

### சேர் இராமசாமி

திருவிதாங்கூர் திவானுகிய சேர், வி. பி. இராமஸ்வாமிஐயர், தம் பதவியை விட்டு விலகிவிட்டார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி ஆகஸ்ட் 23

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம். ஆர் தர்மாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-5 கும்பகோணம் பி கிருஷ்ணசாமி வயலின் 8½ சித்ரகானம் இசைத்தட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 கும்பகோணம் பி. கிருஷ்ணசாமி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஆங்கிலத்தில் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2 05 ஆங்கிலத்தில் பேச்சு 2-15 கோயமுத்தூர் டி. என். நாகராஜன் பாட்டு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5-00 எம். ஆர். தர்மாம்பாள் பாட்டு 5 40 திருமொழி விளக்சம் 6 00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7.00 கோயமுத்தூர் டி. என் நாகராஜன் பாட்டு 7-15 என் சொந்த அபிப்பிராயம் ஆசிரியர் தொழில் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மகாநாவில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வர்ணக்கயிறு தொடர் கதை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள்: வானிலை (ஆங்கிலம்) 9¾ சாக்ஸபோன் பியானோ ஆ இ. ரே. வித்வான்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10½ ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஆகஸ்ட் 24

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 என் வி. வசந்த கோகிலம் இசைத்தட்டு 8-30 ஜி. சரஸ்வதி 9 ஒலிபரப்பு முடிவு.

### ஒலி மலர்

12 சதம்பம் 12½ முகப்புச் சித்திரம்: முறுவல் சம்பாராமாயணத்திலிருந்து ஒரு காட்சி 12 35 கல்யாணம் செய்தும்—நாடகம் 12 45 நினைப்பும் நடப்பும்: வாகனம் — நாடகம் 12-55 நடன வேளாவளி 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. ஆர். நவனீதம் புல்லாங்குழல் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2.30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3.00 ஒலிமலர் முடிவு.

மாலை 5 மூவலூர் எஸ். செல்லப்பா பாட்டு 5-40 தேவாராதனை (ஆங்ளிகன்) 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஆர் பத்மா வீணை 7-30 தமிழில் செய்திகள் 7-45 புத்தகவிமர்சனம் 8 00 மைலம் பி. வஜ்ரவேலு முதலியார் பாட்டு எம். என். கணேச பிள்ளை வயலின் திருக்கோகர்ணம் எ. மீனாக்ஷிசுந்தரம் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 டி. சூர்யகுமாரி இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள்: வானிலை (ஆங்கிலம்) 9.45 ஜே. எம், அப்துல்கனி விதார் 10.00 இசைவேளை இசைத்தட்டு 10 30 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஆகஸ்ட் 25

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வடபாதி மங்கலம் எஸ். எம். ராமசாமி பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் ஆ. இ. ரே வித்வான்கள் தயாரிப்பு 8 30 வி. ஆர். அனந்த பாகவதர் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பாபநாசம் எஸ். பாலசரஸ்வதி வயலின் 2 தமிழில் செய்திகள் 2.05 பாபநாசம் எஸ். பாலசரஸ்வதி வயலின் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 வடபாதிமங்கலம் எஸ். எம் ராமசாமி பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம். எஸ். சுப்புலக்ஷ்மி இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 கலைக்கு முட்டுக்கட்டை கட்டுப்பாடுகள் 8 பாபநாசம் எஸ். பாலசரஸ்வதி வயலின் 8-30 திருச்சி வாத்ய கோஷ்டி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 லைலாமஜ்னு இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள்; வானிலை (ஆங்கிலம் 9-45 கே. வி காளிதாஸ் பாட்டு 10 குழலிசை இசைத்தட்டு 10-15 குரல் வகை இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு

செவ்வாய் ஆகஸ்ட் 26

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி. ராதாகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 தந்திஇசை இசைத்தட்டு 8-30 சேலம் எ தொட்டண்ணு புல்லாங்குழல் 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி ராதாகிருஷ்ணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி ராதாகிருஷ்ணன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 சேலம் எ தொட்டண்ணு புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் 7.15 இலக்கியவாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மாயவரம் கோவிந்தராஜபிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே சுந்தி பாட்டு [illegible] நீங்கள் கேட்டவை இசைத்தட்டு [illegible]

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

ஷை கல்லூரியில் நாளைத் தினம் (23—8—47) நிகழுமென்றிருந்த பரிசளிப்புவிழா நடக்கமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது. பரிசளிப்பு விழாவுக்கு வரவிருந்த நீதியரசர் கௌரவ ஸ்ரீ வி. நாகலிங்கமும் ஸ்ரீஜஸ்ரீத் வி. வி. கிரியும் கொழும்பில் இருந்து இங்கு வரமுடியாமையே, இவ்விழாவை நிறுத்தவேண்டியேற்பட்ட காரணங்கள்.


### விளம்பரம்

சருங்காவிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்துக்குரிய பின்னல் விபரிகப்பட்டிருக்கிற ஆதனங்கள் 30-8-47 சனிக்கிழமை பகல் 2 மணியளவில் சமாதானவலத்தில் குத்தகைக்குக் கொடுக்கப்படும்

குத்தகைக்காரனாக நியமிக்கப்படுபவர் பரப்பு ஒன்றுக்கு 5 ரூபா முற்பணங் கட்டுதல் வேண்டும். குத்தகை எடுக்க விரும்புவோர் அன்று பகல் 12 மணிக்குமுன் கிடைக்கத்தக்கதாகக் கேள்விப் பத்திரம் எழுத்தில் அனுப்புதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 புல்லக்தோட்டம் பரப்பு இலா | | 36 |
| 2 கிரானை | ,, | 20 |
| 3 அறுபதாம்பிட்டி | ,, | 30 |
| 4 போசுட்டி | ,, | 10 |

மேலும் கோயிலுக்குத் தேவையற்ற மரங்களும் விற்கப்படும்.

இ. நாலிங்கர்
அத்தியட்சகர்

காரைநகர்
18-8-47

M 117—22-8-47.

### விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் கைதடி நாவற்குழியிலுள்ள இராவளை வைரவத்தியன் குளத்திலுள்ள திருத்தங்கள் செய்வதற்கு, வடமாகாண ஏசண்டரவர்கள் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு ஆவணி மாதம் 26-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை, ரூபாய் 50 கச்சேரியல் கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பமிடப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமாக - டெண்டர் 1947 ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ந் திகதி பகல் 12 மணிக்குள் பெறுக் கொள்ளவேண்டும்

மறு விபரங்களை வடமாகாண ஏசண்டரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G 87 22-8-47

### விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் பூனகரித் துணுக்காய்ப் பகுதியிலுள்ள முல்லைக்குளத்திலுள்ள மண்கட்டுயர்த்துதல் முதலிய வேலைகள் செய்வதற்கு, வடமாகாண ஏசண்டரவர்கள் 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார் குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் ஐம்பது (ரூபா 50) கட்டி வடமாகாண ஏஜண்டரின் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பபத்திரமாக — டெண்டர் — 1947—ம் ஆண்டு அல்லது -ஆவணி- மாதம் 23-ந் திகதி பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும். மறு விபரங்கள் வடமாகாண ஏஜண்டரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G 84 — 22 8 47


# வள்ளியம்மானை

—: இறைமணி :—

கந்தன் கலியுகவரதன், வெற்றி வடிவேலன், சுரரைத் துயர்தீர்க்கத் தோன்றிய சூர்ப்பகை. தேவேந்திரன் மகள் தெய்வயானையை மணந்த சீலன். தேவசேனாபதி. அன்பர்க்கெளியன்,

இவ்வரதன் பக்தர்க்கருள் கொடுத்தற்காகப் பல தலங்களில் எழுந்தருளியிருக்கின்றான். இவனைப் பாடாத புலவரில்லை, அவரெல்லாம் பல புராணங்களையும், பிள்ளைத்தமிழ் நூல்களையும், பிரபந்தங்களையும் சூட்டினர். இவ்வறுமுகப் பெருந்தகையின் வரலாறு பல நூல்களிற் கூறப்படுகின்றது. சூரனைச் செற்றபின் செருத்தணியிலிருந்த செவ்வேள் குறவர் குலக்கொழுந்தினை-வள்ளியை - மணந்தகதையும் அவற்றுள் விளக்கப்படுகின்றது.

இக்கதையினை உட்கோளாகக் கொண்டு அகவற்பாவா னியற்றப்பட்டநூலே வள்ளியம்மானை. இதனை இயற்றியவர் மட்டக்களப்பி லிருந்த கவிசாகர கந்தப்பெருமாள் என்னும் புலவர் பெருந்தகையாவர். இவரைப் பற்றிய திட்டமான வரலாறுகள் இன்று கிடைத்தில. நூலின் ஏட்டுப் பிரதி யொன்றில் கஅஅச-ம் ஆண்டு ஆகஸ்டு உஅ-ந் உ எழுதி முடிந்தது என்னும் சொற்றொடர் காணப்படுகிறது. நூலாசிரியர் பெயரும் பிரதி செய்தவர் பெயரும் காணப்படுகின்றன. பிரதிசெய்தவர் பிற வரலாறுகளைக் குறிப்பிடாமை வருந்தத்தக்கதே.

'வள்ளியம்மானை' யென்னும் பெயருடைய இருஅச்சுநூல்களும் கிடைக்கின்றன. அவை வேறு. இங்குகுறிப்பிடும் நூல் வேறு. மூன்று நூல்களையும் ஒப்பிட்டு நோக்குவார்க்கு இவை நன்கு புலப்படுவனவாகும். சொல்லாட்சியிலும், கதைப்போக்கிலும் இந்நூல்களிடையே பெரிதும் வேறுபாடு காணப்படுகின்றது.

இந்நூலில் திருத்தணி, கதிரை, பழனி, திருப்பரங்குன்றம், முதலிய பல தலங்களின் வரலாறுகள் கூறப்படுகின்றன. பல அரிய புராணக் கதைகளும் இடம் பெற்றுள. இந்நூல் மொத்தம் மூவாயிரத்து எண்ணூற்று ஐம்பது (3850) அடிகள் கொண்டது அரிய வர்ணனைகள் பல அமையப்பெற்றது. அதன் முற்பகுதியை இங்கு தருகின்றேன்.

காப்பு

செங்கைமுகி லாங்கருணைச்
செவ்வேள் குறமாதின்
பங்கயஞ் சேரம்மானை பாடவே-
துங்கக்
கடகவரி வாரணத்தின்
பொற்பாதஞ் சேர்ந்தார்க்குக்
கடகவரி வாரணமே காப்பு.
மணவருவு பூங்கூந்தல்
வள்ளிதன் இக்கதைக்குக்
கணபதியே பொற்காதங்காப்பு.

நூல்

சீரார் பழனிவருஞ் செவ்வேளை
யான்பாடக்
காரானை மேனிக் கணபதியே!
முன்னடவாய்
முன்னடவாய் தந்தி முகனுக்
கிளையோனே!
கன்னல் பொரிய வலும்
கற்கண்டு சர்க்கரைதேன்
கடலை துவரையுடன்
காரம்பய றிளநீர்
விடலை பணிகாரம் விரைவிற்
படைத்திடுவேன
சிறுபயறு சர்க்கரைதேன்
தெவிட்டாத நற்கனியும்
உறுதியுடனுந்தனக்கு உவந்து
படைத்திடுவேன்
திடமாக விக்கதையைச்
செப்பவே யிப்புவியில்
கடகவரி வாரணமே! கற்பகமே
முன்னடவாய்
அந்திபிளப் பிறையும்
அறகோடரவணியும்
சங்கரனீன்ற சண்முகனே!
முன்னடவாய்
வந்துதவாய் செந்திநகர்
வானவர் சேனபதியே!
தந்திமுகனுக்கிளையசண்முகனே!
முன்னடவாய்
ஆதியறுமுகனே! யச்சுதனே!
முன்னடவாய்
சோதிவிளக்கொளியே!
சுடர்வேலா! கண்மணியே!
ஈரேழுலகுதன்னை ஈடேற்றும்
புத்திரனே!
சீரகவுன்பாதஞ் சேர்ந்திருந்து
வாழ்வதற்கு
பாலுக்குள் நெய்போற் பரந்த
பெருஞ் செல்வம்
ஆலுக்குளரலம் விரைபோ
லமர்ந்தவனே!
தேனுக்கு ளினிமையதாய்ச்
சிந்தைதனிற் சிந்தையதாய்
ஊனுக்குயிரா உற்பவித்த
மெய்ப்பொருளே!
எள்ளுக்கு ளெண்ணெடதா
யெங்குங் களிகூர
உள்ளுக்கு ளுள்ளொழியா
யுற்பவித்த மெய்ப்பொருளே!
அடியார் துயரமற அசுரர்
குலமுமற
வடிவே லெடுத்துவரும்
வன்னமயில் வாகனனே!
கந்தரே யுந்தன் கழலிணையில்
யானுமின்று
இந்தத் தமிழ்பாட இன்னருளை
ஈந்தருள்வாய்
ஆககமுட னிக்கதையை
யடியே னுரைப்பதற்கு
வாக்கதனில் வந்துதவாய்
வாலசரஸ்பதியே!
பாரேழுமீன்ற பராபரியே!
நாரணியே!
சீரக வென்னுவில் சிறப்பாக
வந்துதவாய்
வள்ளிதனை வேளர் வதுவை
செய்து கொண்டகதை
தெள்ளு தமிழ்ப்பாடல்
சிந்தைதனிலே தெரிந்து
பாடுகிறே னிப்புவியில்
பாவலர்கள் தங்கள்முன்னே
நாடித் தமிழ்தெரிந்த
நாவலர்கள் தங்கள்முன்னே
அத்தனையும் புன்சொல்லே
யானாலும் பூவுலகிற்
குற்றமொன்றும் வாராமற்
குறைதீர்ப்பாய் கற்பகமே!

—வரும்.


### விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன; எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

பத்திராஜு மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ
கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11 7—10-10-47.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை நிகழும் தேர்தல்

வெள்ளப்பெருக்கின் காரணமாக தென் இலங்கையில் நாளைத் தினம் தேர்தல்கள் நிகழமாட்டா என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நுவரெலியாத் தேர்தலை ஒழிந்த ஏனைய தேர்தல்கள் முன்னேற்பாட்டின்படி நாளைக்கு நடக்கும் எனத் தெரிகிறது. பின்வரும் தொகுதிகளில் நாளை தேர்தல் நிகழும்.

மீரிகம, கோட்டை, அகலவத்த, கண்டி, மாத்தறை ஊர்காவற்றுறை, திருக்கோணமலை, பிங்கிரிய, பண்டாரவளை, கிரியல.

## இலங்கையின் பொல்லாத வெள்ளச் சேதம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஓயா ஸ்டேசனுக்கு அப்பால் தந்தித் தூணுக்குமேல் வைக்கோல்குவியலுண்டு; அது வெள்ளம் உயர்ந்த அளவைக் காட்டுகிறது கடைகள் வீடுகள் பெருஞ்சேதத்துக்குள்ளாயின. ஒருவீட்டில் மாத்திரம் 1? பிரேதங்கள் இருந்தன உட்பூட்டுப் பூட்டப்பட்ட கடைகள் இன்னும் திறக்கப்படவில்லை. 6-30 மணிக்கு பேராதனைக்கு வந்து சேர்ந்தோம். இங்கு 56 அடி உயரத்துக்கு வெள்ளம் பெருகியது கண்டிப் பலர் உடைந்து 10 யாருக்கு அப்பால் வெள்ளத்தால் வீசப்பட்டுள்ளது. காத்தைப் பாலம் தப்பிவிட்டது. கடைகளும் வீடுகளும் உயிர்ச்சேதம் பொருட்சேதத்துக் குள்ளாயின இங்கிருந்து கண்டிக்கு 7-40க்குப்பே யச சேர்ந்தேம். கடுகண்ணவையில் 1 மைல் நீளத்துக்கு மலை சரிந்து புகைரதப் பாதையை மூடிவிட்டது. ஒரு கார், ஒரு பஸ் மூடுண்டுவிட்டது 18-8-47 இல் கடுகாஸ் தோட்டையைப் பார்க்கப் போயிருந்தோம் பாலம் தப்பிவிட்டது. மாத்தளைக்குக் கண்டியிலிருந்து பஸ் போகிறது. மாத்தளையில் மலை சரிந்து நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. கடுகாஸ்தோட்டையில் 2½ மைல் நீளம் வீடுகள் கட்டிடங்கள் தரை மட்டமாயின பின்னர் பேராதனைக்கும் கண்டிக்கும் இடையில் உள்ள கெத்தம்பைக்கு வந்துள்ளோம்; வற்றிய வெள்ளத்தில் பிரேதங்கள் அகப்படுகின்றன. ஒன்றரைமைல் நீளம் வீடுகள் கட்டடங்கள் தரைமட்டமாயின. எங்கிருந்தோ 3 லொறிகளை வெள்ளம் உருட்டிவந்து விட்டுள்ளது. நொறுங்கிய வீட்டுக்குமேல் 4 அடி உயரத்துக்கு மணல் குவிந்துள்ளது ஓர் ஒதுக்கில் ஒரு மாமரத்தில் 62 பேர் இருந்து உயிர் தப்பினார்களாம். பல பெரிய பங்களாக்கள் தரைமட்டமாகி 3 அடி மணலில் மூடுண்டுள்ளன. பல கட்டிடங்களின் அத்திவாரத்தைக் காணவில்லை றோட்டில் உள்ள தந்தித் தூண்கள் சாரத்தூண்களைக் காணவில்லை.

### யாழ்ப்பாண மக்கள்

சேதம் ஏற்பட்ட இடங்களில் எல்லாம் விசாரித்தேம். யாழ்ப்பாண மக்கள் எவராவது உயிர் இழந்ததாகத் தெரியவில்லை பொருட்சேதம்ஏற்பட்டதும்குறைவு இப்புள்ள சுருட்டுப் புகையிலைக்கடைக்காரர்களுக்கு வருவாய்க்குஇடமுண்டு

சேதம் பெரும்பாலும் ஆற்றோரத்திலும் பள்ளத்தாக்குகளிலுமே ஏற்பட்டுள்ளது; மற்றப்படிமலைச்சரிவு மண்சரிவுகளினாலும் சேதம் ஏற்பட்டுள்ளது ஆங்காங்குள்ள நகரசபைகள் இலவசஉணவு அளிக்கின்றன. கண்டி மாத்தளைக்கு தபால்கள் கிடைக்கின்றன. பேராதனைக்கு அப்பால் தான் பெரும் கஷ்டம். தந்திப் போக்குவரத்துகள் 1 வாரத்துக்கிடையில் ஏற்படும். சாதாரண போக்குவரவு ஏற்பட 3 மாதத்துக்குமேல் 6 மாதம் வரையிலும் செல்லும். ஆங்காங்குநிவாரணநிதிதிரட்டப்படுகிறது கம்பளையில் ஓர் யானையை தென்னை மரத்தில் கட்டியிருந்தார்களாம் தென்னைமரத்தை வெள்ளம் பிடுங்கிவிட்டதாம். மரத்தையும் யானையையும் வெள்ளம் உருட்டி உருட்டிக் கொண்டுபோய் விட்டதாம். பெற்றோல் கஷ்டம் ஏற்பட்டபடியால் பஸ் போக்குவரத்துக்கள் கஷ்டத்துக்குள்ளாகிவிட்டன. மலைநாட்டு மகள்யுத்தகாலத்தைப்போல் தபால்-தந்தி-பத்திரிகைகள் போக்குவரவுகள் இன்றித் துண்டிக்கப்பட்டு பெரும் கஷ்டம் அடைகிறார்கள். உணவுக்கஷ்டம்அதிரிக்கிறது.

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

களை உற்றுப்பார்ப்பது முறையல்ல என்று எண்ணத்தினால் பாராமல் விட்டுவிட்டேன்" என்று அந்த ஆள் சொல்ல, அப்படியானால் பிறகு என் ஐயா அவர்களைப் பார்த்தீர்கள்? அவர்களைப்பற்றி விசாரிக்கிறீர்கள்" என்று சிரித்துக்கொண்டு இராமன் கேட்க, அந்த மனுஷனும் பதில்சொல்ல மாறியாளைப் புன்னகைசெய்துவிட்டிருந்தான்; கப்பலின் மேற்றட்டிற் போய் மீண்ட கன்னியரிருவரும் அந்தஆளை கிழற்படமெடுப்பார்போல் அவதானமாகப் பார்த்துக்கொண்டு வந்துவிட்டார்கள். தங்கள் அறையைச்சேர்ந்தவுடன் அவர்களிருவருந்தங்கள்உடைகளைமாற்றி வழக்கமான உடையைத் தரித்துக்கொண்டிருந்தார்கள். தாங்கள் கண்டவரைப்பற்றி, சிவபாக்கியம் தனக்கு ஏதுஞ் சொல்லுவாளென எதிர்பார்த்திருந்தாள பாக்கியலட்சுமி; பாக்கியலட்சுமி ஏதுங்குறிப்பாகச் சொல்வாளோ என்று எதிர்பார்த்தவண்ண மிருந்தாள் சிவபாக்கியம்: இருவரும் இப்படி யெதிர்பார்த்தவண்ண மிருந்து கொண்டு தத்தம் கருத்தை முந்தியே வாய்திறந்து வெளியிடாமையினால் இருவருக்குமிடையே சற்றுநேரம் மௌனமே நிகழ்ந்தது; ஈற்றில், சிவபாக்கியம் புன்னகையரும்பப் பாக்கியலட்சுமியை ஆதரவோடு பார்த்து 'தங்காய், நாங்கள் வேஷம் மாற்றி உடை மாறிக் கப்பலின் மேற்பக்கப் போய்ப் பார்த்து மீண்டு வந்தமையினாலே ஏதும் பயனுண்டோ? இல்லையோ" என்று புன்முறுவலரும்ப வினவ, உண்டோ இல்லையோ என்பது உங்களுக்குத்தானே விளங்கும், அக்கா" என்று சாதுரியமாகப் பதில் சொன்னாள் பாக்கியலட்சுமி: சிவபாக்கியம் சிறிதுநேரம் யோசித்துவிட்டு, "பயனுண்டென்றுதான் நினைக்கிறேன்" எனலும், "பயனுண்டென்று நீங்கள் நினைத்தால் நானும் அப்படித்தானே நினைக்கவேண்டும்" என்றாள் பாக்கியலட்சுமி; கேட்ட சிவபாக்கியம் பாக்கியலட்சுமியைப் பார்த்து "என் அருமைத் தங்காய், எனக்காக அப்படிச் சொல்லவேண்டாம், உம்முடைய மனக்கிடக்கையை உள்ளபடி யெடுத்துச் சொல்லும்" எனலும் "அக்கா, நீங்களும் எனக்காகச் சொல்லவேண்டாம், உங்களுடைய உள்ளக்கிடக்கையை உள்ளபடி சொல்லுங்கள்" என்று புன்முறுவலுடன் கேட்டாள்" பாக்கியலட்சுமி; சிவபாக்கியஞ் சிரித்துக்கொண்டு "பயனில்லையென நினைக்கிறேன்" எனலும், அவளுஞ் சிரித்தபடியே "அப்படித்தான நானும் நினைக்கிறேன்" என்றாள். "தங்காய், வேடிக்கையாகப் பேசுவதைவிட்டு நிசத்தைச் சொல்லும்" என்று பரிவுடன் கேட்க "அக்கா, உங்களுடைய சம்மதத்தையும் எங்கள் அம்மாவின் சம்மதத்தையும் விட எனக்கென்று தனியேயொரு சம்மதம் நோக்கப் இல்லையே யென்று முந்தியே நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேனே" என்று ஆகாங்கூரப் பாக்கியலட்சுமி கிளியென மொழிதலும், "நீரல்லவா என் அருமைத் தங்கை, நான் கேட்டது என்மேற் குற்றம்" என்று அன்பொழுகப் புகன்று அவளுடைய முகத்தைத் தன் மிருதுவாகிய கரத்தினால் தடவுதலும், பாக்கிய இலட்சுமி தன் மென்மையான கரத்தைத் தமக்கையின் தோளில் இட்டபடி உள்ளுருகி நின்று, அவள் தன்னிடத்திற் கொண்டுள்ள அன்பினைத் தன் கண்களாற் பருகினள்.

(வரும்)

உ

சிவமயம்

## சைவப் பிரசங்கம்

நிகழும் சர்வசித்து ஞு ஆவணி மீ அ உ (24-8-47) ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில், இந்து மத சீர்திருத்த மாத வெளியீடாகிய "தொண்டன்" ஆசிரியர் உயர்திரு. கெ. ஆறுமுகநாவலரவர்கள் 'இறைவனும் இன்னருளும்' என்னும் பொருள்பற்றி ஒரு அரிய பிரசங்கம் செய்வார்கள்.

மேற்படி கூட்டம் இந்து சாதனப் பத்திராசிரியராகிய பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்கள் தலைமையில் நடைபெறும்.

☞ சைவாபிமானிகள் யாவரும் சமுகம் அளிப்பார்களாக.

20-8-47

இங்ஙனம்

மு. மயில்வாகனம்

காரியதரிசி

## சைவமக்கள் கடன்

காரைநகர்ச் சைவமகாசபை ஆதரவில், சைவப் பெரியார் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் செய்த பிரசங்கச் சுருக்கம்:-

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து — ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன்பணிக்காக" எனப் பெரியார் பணித்துள்ளனர். மனத்தை முதற்கண் எடுத்துக் கொண்டார்; இடைவிடாது இறைவனை நினையா வழி, ஏனைய வாக்கினாற் செய்யுந் தோத்திரமும்; காயத்தினாற் செய்யும் வணக்கமும் பெரும் பயன் தராது. ஆவாா நீர்மையவாகும் என்பது அறிவித்தற்கு "மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தும் அறம், ஆகுல நீர பிற" என்பது பொய்யில் புலவன் பொருளுரை.

வாழ்த்த வாயும், நினைக்கமடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்ததலைவனை—சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே—வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே" என்று எங்கள் சைவத்து மாபெருந் தலைவர் அப்பர் சுவாமிகள் பெருங் கவலையடைகின்றார். அங்ஙனமானால் இறைபணி வழியில் எங்கள் மனமொழி மெய்களைச் சிறிதும் செலுத்தாது, வாணாளை வீணாக்கும் நாங்கள் எவ்வளவு அதிகம கவலைப்படவேண்டும்? இவ்வுடலில் ஒதுக்குக் குடியிருக்கும் யாங்கள் இவ்வுடலுக்குச் செலுத்தவேண்டிய குடிக்கூலிக்காகவே எங்கள் வாழ்நாளை முழுவதும் முயற்சி செய்வோமானால், இவ்வுடலில் நாங்கள்வந்து குடியிருக்கும் நோக்கமென்னவென்பதைச் சிந்திப்பது எப்போது? வந்த நோக்கத்திற்குரிய முயற்சியைச் செய்வது எப்போது? "சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்—பாழின உடம்பை வயிற்றின் கொடுமையால்—நாழி அரிசிக்கே நாம்" என்ற ஔவைப்பிராட்டியின் அறிவுரையை நாங்கள் சிறுகாலையே அறிந்திருந்தும் அதனைச் சிந்திக்காது விட்டுவிடலாமா?

எங்கள் திரிகரணங்களாகிய மனமொழிமெய்கள் இறைபணிக்காகவே பிரதானமாக அமைந்தன என்பது பெரியோர் கொள்கை. ஆனால் அவை ஒவ்வொன்றும் தூய்மையுடையனவாகஇருந்து இறைபணிசெய்தபோதுதான்பெரும்பயன் உண்டாகும். மனத்துக்கண் உண்டாகும் குற்றங்கள் [illegible], அறியாமை, ஈவின்மை, செருக்கு, பொறாமை என்பனவாம். இந்த உட்பகைகளை நீக்கி, மனத்தைத் தூய்மை செய்துகொள்ளல் வேண்டும். மொழியின்கண் உண்டாகும் குற்றங்கள், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல்: புறங்கூறல் என்பனவாம். இவைகள் நீங்கியவிடத்துத்தான் வாக்குச் சுத்தமுடையதாகும். மெய்யில் உண்டாகும் குற்றங்கள் கொலை, களவு, காமச் சேட்டை என்பனவாம். இவை அணுகாதபடி உடலைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். இக் குற்றங்களோடு கூடிய மனமொழிமெய்களால், இறை வழிபாடு செய்யின் யாதும் பயன இன்றாகும். பின்னைப்பிறரை ஏமாற்றுமளவே பயனும். அதுவும் வெகுநாள் வாய்க்காது.

சிலருடைய எண்ணம், "நிறையத் திருநீறு பூசிக்கொண்டால், அதனோடு உருத்திராட்சமும் அணிந்துகொண்டால், அந்தி சந்தி கோயிலுக்குப் போனால், மற்ச மாமிசம் புசியாவிட்டால், பிறர் காணாது புசித்தால், சிவபூசையுஞ் செய்துகொண்டால் போதும். இவ்வளவிலேயே எல்லா நன்மைகளையும் அடைந்துவிடலாம்" என்பது. ஆனால் அவர்கள் பொய் சொல்வார்கள், களவெடுப்பார்கள், விபசாரஞ் செய்வார்கள், மதுவும் பருகுவார்கள், கொலையுஞ் செய்வார்கள், பொய் வழக்குத் தொடர்வார்கள்; பிறரை ஏமாற்றுவார்கள். ஏழைகளுக்கு இரங்கி இம்மியளவும் ஈயமாட்டார்கள். இவ்விதமான குற்றங்கள் செய்பவர்கள் முன் சொல்லிய வெளிவேஷங்களைச் செய்வதால் என்ன பிரயோசனம்? மருந்து நல்லதாயிருந்தாலும் பத்தியமில்லாவிட்டால் நோயை மாற்றுமா? கள்ளுக் குடத்தைக் கங்காஸ்நானம் செய்துவைததாலும் தன்மணம் மாறுமா?

நல்லொழுக்கம் இல்லாவிடத்துச் சமய வழிபாடுகள் பெரும்பயன்தரா. சமய வழிபாட்டின் பெரும் பகுதி சமய ஆசாரமே. சமயாசாரமில்லாதவன் அந்தச்சமயத்தவனாகான். 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் — நற்றாள் தொழாஅர் எனின்" எனனும் பொய்யா மொழிகளைச் சிந்தித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லைப்புற எதிர்காலம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ரம்ழான் உபவாசம் முடிந்துவிட்டது. இனி எல்லைப்புறத்தில், அரசியல் சம்பந்தமான, புரட்சிகரமான பல நிகழ்ச்சிகள் ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், அப்கானிய அரசாங்கம் எல்லைப்புறம் சுயராஜ்யம் அடையும் விஷயத்தில் மிகவும் சிரத்தை எடுப்பதாகத் தெரிகிறது. எல்லைப்புறத்தை இந்தியாவுடனே, பாகிஸ்தானுடனே சேர்க்காது, சுயராஜ்யநாடாக்க வேண்டும் என்று அப்கானிஸ்தானம் கோருகிறது. தன்னுடைய பாதுகாப்பின் பொருட்டு தனது அயல்தேசமான எல்லைப்புறம் பூரண சுதந்திரத்துடன், அந்நியர் செல்வாக்கில் அகப்படாது இருக்கவேண்டுமென்று ஆப்கானிஸ்தானம் வற்புறுத்தி வருகிறது. இந்தக் கோரிக்கைக்குப் பாகிஸ்தானும், இங்கிலாந்தும் இணங்காவிட்டால், இந்தப் பிரச்சினையை ஐக்கியதேச ஸ்தாபனத்தில் சமர்ப்பிக்க அப்கானிஸ்தானம் தயாராகவிருக்கிறது.

எல்லைப்புறத்திலும், மிகச் செல்வாக்கு வாய்ந்த இப்பி பக்கிரி என்னும் மலைநாட்டுத் தலைவர் டக்ரர் கான் சாகிப்பின் சுதந்திரக் கிளர்ச்சியைப் பூரணமாக ஆதரித்துவருகிறார். எல்லைப்புறமக்கள் முன்னொருபோதுமில்லாதவாறு, தமக்கென ஓர் சுயராச்சியநாடு ஸ்தாபிக்க மிகவும் ஜரூராக விருக்கிறார்கள்.

---


## தமிழ்
### ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

ஆசிரியர் போதனகல்லூரி ஆசிரியர்களால் வகுக்கப்பட்ட பாடத்திட்டம்

முதலாம் அல்லது இரண்டாம் பகுதி

முதலாம் பாடம் ரூபா 7 50

அடுத்தஒவ்வொருபாடத்துக்கும் 5 00

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 15-7 — 25-8-47 (செ)


---


## தேவை

சிவன் ஐக்கிய பண்டகசாலைக்குத் தகுதி வாய்ந்த ஓர் மனேசர் தேவை. சங்கப் பிரமாணங்களுக்கமைய நடக்கவேண்டும். தொடக்கத்தில் மாதச் சம்பளம் ரூபா 55 கொடுக்கப்படும். பிணைப்பணம் ரூபா 450 கட்டவேண்டும். விரும்புவோர் காரியதரிசி அவர்களுக்கு 30-8-47 க்கு முன் விண்ணப்பஞ் செய்யவும்.

சிவன்கோவிலடி  இங்ஙனம்
வட்டுக்கோட்டை  ந. நடேசர்
29-7-47  காரியதரிசி.

M 101 1-8.47 — 29-8-47


---


## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் சட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு  கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48


---


## தந்தரோக சஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு ஏவக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும். முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:
ஆயுர்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30 6 48 (வெ)


---

## சைவ பரிபாலன சபை 59 வது வருடாந்தக் கூட்டம்

நிகழும் சர்வசித்து ஞு புரட்டாசி மீ 5 உ (21-9-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் சபையங்கத்தவர்களாயுள்ளவர்கள் தங்கள் சந்தாப் பணத்தை நிலுவையின்றித் தனாதிகாரியிடம் செலுத்தவேண்டும். சந்தாப் பணம் நிலுவையுள்ளவர்கள் கூட்டத்தில் வாக்குரிமைக்கு அருகரல்லர்.

மு. மயில்வாகனம்
11—8—47  காரியதரிசி
யாழ்ப்பாணம்.  சைவபரிபாலனசபை

Mis 115 1° 8.47 —29.9-47

---


## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ் வங்கி.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம் யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std 29 1-8—30 7-48) (F)


---

உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்

### ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்
## திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமென் கொங்கிறீற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டியிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"போர்பொழு தருந்துணை புரிந்த புண்ணியர்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1-7-47 30-9-47

---


## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் போகும் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—30-6-48


---

## விளம்பர மின்றேல் பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, August 22 1947

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org